திருக்கோவிலூர் – கீழத்தாழனூர் கிராமத்தில்

# மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, செப். 17 -**

**கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், கீழத்தாழனூர் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், அரும்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கலியபெருமாள் த/பெ. குப்பன் என்பவர் நேற்று (14.9.2025) பிற்பகல் சுமார் 02.00 மணியளவில் கீழத்தாழனூர் கிராமத்தில் இரும்புக்குழாயினை எடுக்க முயன்றபோது எதிர்பாராதவிதமாக உயர்மின் அழுத்த மின்சாரம் தாக்கியதில் மேற்படி நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த திரு. கலியபெருமாள் அவர்களின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

# கரூரில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவில் தி.மு.க.வினர் திரளாக பங்கேற்க வேண்டும்!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. செய்தியாளர்களிடம் பேட்டி!

செஞ்சி, செப். 17-

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' புதிய உறுப்பினர் சேர்க்கையில் 341955 பேர் இணைந்துள்ளனர்.

என விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்தார் இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில்:

ஜூலை 1ம் தேதி தி.மு.க. தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் "ஓரணியில் தமிழ்நாடு" இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

இன்று நாம் எதிர்கொள்ளும் பண்பாடு, பொருளாதாரம் மற்றும் அரசியல் அநீதிகளுக்கு எதிராக தமிழ்நாட்டின் ஒவ்வொருவரையும் ஒன்றிணைக்கும் இயக்கமாகும்.

தமிழர் பண்பாட்டை பறைசாற்றும் கீழடி புறக்கணிப்பு, இந்தி திணிப்பு, தமிழ்நாட்டுக்கான நிதி மறுப்பு, நீட் போன்ற நியாயமற்ற தேர்வுகள், நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை சதி என தமிழ்நாட்டின் மண், மொழி, மற்றும் மானத்தின் மீது தொடர் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

இவற்றையெல்லாம் எதிர்த்து தமிழ்நாட்டு மக்களை ஒன்றிணைக்க துவங்கப்பட்டது தான் ஓரணியில் தமிழ்நாடு.

தமிழக முதல்வரின் அறிவிப்பின்படி திமுக.,வினர் தமிழகம் முழுவதும் 68000 வாக்குச்சாவடிகளில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் நேரில் சென்று வாக்காளர்களை சந்தித்துள்ளோம்.

ஓரணியில் தமிழ்நாடு மூலம் தமிழகம் முழுவதும் ஒரு கோடிக்கும் மேற்பட்டவர்கள் தி.மு.க.வில் இணைந்துள்ளனர்.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு மூலம் செஞ்சி - 40000 மைலம் 36000 திண்டிவனம் 37800 என மொத்தம் 1 லட்சத்திற்குமேல்புதிய உறுப்பினர்கள் இணைந்துள்ளனர்.

அண்ணா பிறந்தநாள் இன்று அனைத்து வாக்குச்சாவடி பகுதிகளிலும் 'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்' உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

விழுப்புரம் வடக்குமாவட்டம் செஞ்சி மயிலம் திண்டிவனம் தொகுதிகளில் உள்ள 840 வாக்குச்சாவடிகளிலும் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்த குடும்பங்கள் ஒன்றுகூடி உறுதி மொழி ஏற்று தீர்மானத்தை முன்மொழிந்தனர்.

கரூரில் நடைபெறும் முப்பெரு விழாவில் அனைத்து வாக்குச்சாவடிகளில் முன்மொழியப்பட்ட தீர்மானங்களை தலைவர் மேடையில் நிறைவேற்றுவார்கள். அதேபோல் கரூரில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவில் தி.மு.க.வினர் திரளாக பங்கேற்க வேண்டும்.

செப்டம்பர் 20,21ஆம் தேதிகளில் ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டம் தலைமைக் கழகம் அறிவிக்கும் இடங்களில் தலைமைக் கழக பேச்சாளர்கள் கொண்டு மாவட்ட அளவில் கூட்டம் நடைபெறும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

பேட்டியின் போது செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் செஞ்சி நகர் செயலாளர் கார்த்திக் ஆகியோர் உடன் இருந்தனர்.




விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணாவின்பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மலர் தூவி மரியாதை செலுத்தி தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என உறுதிமொழி ஏற்றனர். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



கடலூர் மேற்கு மாவட்டம்,விருத்தாசலம் வடக்கு ஒன்றியம் தொரவளூர் ஊராட்சியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவுருவச் சிலைக்கு விருத்தாசலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கனக. கோவிந்தசாமி தலைமையில் மாலை அணிவித்து உறுதி மொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்வில் பட்டி. சு.கருணாநிதி, ஆர்.ஜி.சாமி, பட்டி.சு.வசந்தகுமார், சாந்தி மதியழகன், பொன்.சிவக்குமார், தர்ம.மணிவேல், கோவிந்தராஜ், கே.என்.வெங்கடேசன், பால.பாரதி, ஜெயராமன், ஜெய்சங்கர், மாரிமுத்து, விஸ்வநாதன், பன்னீர் செல்வம், லட்சுமணன், சௌந்தரராஜன், கோபால் மற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கழக நிர்வாகிகள், ஊர் பொது மக்கள் அனைவருக்கும் ஊராட்சி மன்றத் தலைவர் சங்கீதா அருளரசன் நன்றி தெரிவித்தார்.



புதூர் காந்தி பஜார் மெயின் ரோட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, அன்னாரின் உருவப்படத்திற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். மேலும் "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்" என்ற தலைப்பில் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். நிகழ்வில் விளாத்திகுளம் பேரூர் கழகச் செயலாளர் வேலுச்சாமி, விளாத்திகுளம் பேரூராட்சி தலைவர் சூர்யாஅய்யன்ராஜ், மாவட்ட;ழ பிரதிநிதிகள் கனகவேல், கிருஷ்ணகுமார் தேர்தல் பொறுப்பாளர் ராமச்சந்திரன் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டார்கள்.

கரூர் கழக முப்பெரும் விழாவில்

# உதகை நகரக் கழகத்தின் சார்பில் திரளாகப் பங்கேற்பு!

## நகரக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

உதகை, செப். 17-

உதகை கிழக்கு நகர தி.மு.க. சார்பில் வாக்குச்சாவடி பாக முகவர்கள் கூட்டம் மாவட்ட திமுக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. இதில் நகர கழக செயலாளர் எஸ்.ஜார்ஜ் தலைமை வகித்தார். இக்கூட்டத்திற்கு ஜே.ரவிக்குமார், ஏ.நாசர் அலி, ஆர்.இளங்கோவன், எஸ்.ராஜா, ஜெயகோபி, அனில் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் தொகுதிப் பொறுப்பாளர் தென்றல் செல்வராஜ் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

இதில் மாவட்ட, நகரக் கழகத்தின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி பாக முகவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

1. எதிர்வரும் 17.09.2025 அன்று கரூரில் நடைபெறவுள்ள கழக முப்பெரும் விழாவில் உதகை நகர கழகத்தின் சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிப்பது எனவும்

2. தலைமைக் கழக அறிவிப்பின்படியும் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் 20.09.2025 அன்று தமிழகமெங்கும் மாவட்டம் வாரியாக "ஓரணியில் தமிழ்நாடு" பொதுக் கூட்டங்கள் உதகை ATCயில்" நடைபெறுவதையொட்டி நீலகிரி மாவட்டத்தில் அன்று நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உதகை நகர கழகத்தின் சார்பில் கழக நிர்வாகிகள், BLA2, BLC உறுப்பினர்கள், கழக தோழர்கள், கழக குடும்பத்தினர் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிப்பது எனவும்

3. எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகம் அறிவிக்கும் வேட்பாளர் பெற்றி பெற செய்வதற்கு கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் கழக தேர்தல் பணிகளை முழு முயற்சியுடனும் அயராது பாடுவட வேண்டும் எனவும் தீர்மாணங்கள்நிறைவேற்றப்பட்டது

**இரங்கல் தீர்மானம்:**

நீலகிரி மாவட்டத்தின் முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர் அண்ணன் மிசா காந்தல் இராசு அவர்களின் மனைவியும், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளங்கோவன் மற்றும் மாவட்ட பிரதிநிதி வெங்கடேஷ் அவர்களின் தாயாருமான காலம் சென்ற திருமதி தவமணி அம்மாள், 17வது வார்டு கழக தோழர் கேசவ குமார், 19வது வார்டு கழக தோழர் கேசவ குமார், 19வது வார்டு கழகத் தோழர் மௌலானா ஆகியோர் மறைவிற்கு இக்கூட்டம் இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்துகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.






தமிழன்னை தந்திட்ட தலைமகன் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் நம் உயிரைத் தாயென அளித்திட்ட திருமகன், பேரறிஞர் அண்ணா தலைமகன் நிமிர்த்திய தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம் என கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா. உதயசூரியன் அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அண்ணா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, கழக இரு வண்ணக் கொடியை ஏற்றி வைத்து, இனிப்புகள் வழங்கி, பொதுமக்களுடன் பூத் எண் 236 இல் உறுதிமொழி எடுத்துக் கொண்டார், இதில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. விவசாய அணி

### மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!**

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாய அணியின் திருப்பூர் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

தலைவர் - **பி. ஈஸ்வரன்,** 15/72, செம்மே கவுண்டன்பாளையம், சடையபாளையம் அஞ்சல், குண்டடம் - 638702, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - கா. செல்லமுத்து ஆபீஸ் தோட்டம், குப்புச்சிபாளையம், தாராபுரம் - 638657, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - ஆர்.ஜி. முத்துக்குமார் 3, மாரியம்மன் கோவில் வீதி, ருத்ராவதி, குண்டடம் - 638702, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. ஈஸ்வரன் 5/89, மொசுகுத்திவலசு, மறவபாளையம் அஞ்சல், சென்னிமலை வழி - 638051, காங்கேயம், திருப்பூர் மாவட்டம். 2) என். சாமிநாதன் 6-35, புதுவலசு, சாணார்பாளையம், சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம். 3) எல்.பி. பழனிச்சாமி 143, சேரன்குட்டை தோட்டம், இலக்கும நாயக்கன்பட்டி அஞ்சல், வெள்ளகோவில் - 638111, திருப்பூர் மாவட்டம். 4) டி. நாகராஜ் 6/14, பழையாண்டிபாளையம் புதூர், வீரணம்பாளையம் அஞ்சல், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம். 5) எம். செல்வரங்கமுருகன் அரிக்காரன்வலசு அஞ்சல், அரவக்குறிச்சி வழி - 639201, தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம். 6) மில்கா ஆர்.எம். கந்தசாமி மில்கா ஆயில் மில், இராமபட்டிணம், சிவன்மலை அஞ்சல், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம். 7) கே. சுப்பிரமணியம் பாலா கார்டன் சேரன் நகர், வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 13-09-2025.

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

## தி.மு.க. வர்த்தகர் அணி

### மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு!**

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. வர்த்தகர் அணியின் ஈரோடு வடக்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### ஈரோடு வடக்கு மாவட்டம

தலைவர் - **வி.ஆர்.வெங்கிடுசாமி,** மாங்கல்கரடு, நஞ்சை கோபி, பா.வெள்ளாளபாளையம், கோபிசெட்டிபாளையம் ஈரோடு மாவட்டம்.

துணைத் தலைவர் - எஸ்.செந்தில்குமரன், 21/11, பாரதி வீதி, புளியம்பட்டி, சத்தி.

அமைப்பாளர் - கே.பி.எஸ்.மகாலிங்கம், 94, கந்தாம்பாளையம், பச்சாம்பாளையம் (அ), அந்தியூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) மா.சுப்பிரமணியம், 130/ஏ, கெட்டிசமுத்திரம், நம்பியூர். 2) ஏ.ராஜேந்திரன், சீதாலட்சுமிபுரம், கோபி. 3) சு.ஈஸ்வரமூர்த்தி, 4/153, மேட்டுக்கடை, சாவக்கட்டுப்பாளையம், நம்பியூர். 4) கே.குமார், 16/22, நல்லதம்பி வீதி, புதுவள்ளியம்பாளையம், கோபி. 5) ஏ.ஈஸ்வரமூர்த்தி, சத்தி-அத்தாணி மெயின் ரோடு, பங்களாப்புதூர், கோபி. 6) எம்.முத்துசாமி, ஆலாங்காட்டூர், பொலவக்காளிபாளையம், கோபி. 7) ஜி.வி.செங்குட்டுவன், 37, குமணன் வீதி, கோபி.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 13-09-2025.

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பேராவூரணி மிசா மு. கிருட்டிணமூர்த்தி
### செப்டம்பர் 17 (2003)



கழகத்தின் ஆரம்ப கால அமைப்புகளில் வட்டச் செயலாளராக பணியாற்றியவர்.

சட்டமன்ற உறுப்பினராக சிறப்பாக பணியாற்றி மக்கள் மனதில் இடம் பிடித்தவர்.

மத்திய கூட்டுறவு வங்கியின் துணைத் தலைவராகவும், மாவட்ட துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

ஓராண்டு காலம் மிசா கைதியாகவும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**